# இந்து நாகரிகம்

## க.பொ.த. உயர்தரம்

### பாடத்திட்டம்

**(2009 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும்)**


சமயக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
2009

# 1.0 அறிமுகம்

கல்வி என்னும் எண்ணக்கருவானது அண்மைக்காலத்திலே மனித விருத்திக்கான சிந்தனைகளைச் சுட்டிக் காட்டுகின்றது. உலகின் பல்வேறு துறைகளிலும் துரித மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் கட்டிளமைப் பருவ மாணவர்கள் தமது அன்றாட வாழ்வில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இந்நிலையில் இவற்றை வெற்றி கொள்வதற்குத் தேவையான ஆளுமை உடையவர்களாக மாணவர்களை ஆக்குவது இப்புதிய கலைத்திட்டத்தின் எதிர்பார்ப்பாகும். மாணவர்களை மானிடப் பண்புகள் நிறைந்த மனிதர்களாக ஆக்குவதற்கான வழிகளாகவே சமயப் பண்பாட்டுப் பாடப்புலங்கள் விளங்குகின்றன. இவ்வகையில் மனிதனைப் பண்புடையவனாக உருவாக்குவதே கல்வியினதும் சமயத்தினதும் நோக்கமாகும். அத்துடன் இன்று மாணவ சமுதாயத்தை சமூகமயமாக்கும் சாதனங்களாகவும் அவை விளங்குகின்றன.

இந்து நாகரிகப் பாடநெறியானது இலங்கையின் தேசிய கல்வி இலக்குகளையும் தேர்ச்சி மையக் கற்றல் கற்பித்தல் தொழிற்பாடுகளையும் இணைத்துக் கொண்டுள்ளது. அத்துடன் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்தலும், அதனூடாக அவர்களது ஆளுமையை விருத்தி செய்தலும் இப்பாடநெறி மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

- இறைநம்பிக்கை
- இந்து சமய நம்பிக்கை
- சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தல்
- மரபுவழிப் பண்பாடுகளைப் பேணுதல்
- சமயச் சடங்கு முறைகளுக்கு மதிப்பளித்தல்
- சமூக, பொருளாதார, அறநெறிகளைக் கடைப்பிடித்தல்
- அழகியல் ரசனையை விருத்தி செய்தல்

என்பவற்றினூடாக மாணவர்களை நல்ல மனப்பாங்குடையவர்களாகவும் நற்பிரசைகளாகவும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு, இப்பாடநெறி தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், தேசிய கல்வி முறை ஒன்றை வலியுறுத்தும் பாங்கில், அதன் இலக்குகளும் தேர்ச்சிகளும் வலியுறுத்தப்பட்டுள்ளன. அதேவேளை இந்துக்கள் தமது சமயப் பெறுமானங்களை விருத்தி செய்யக்கூடியவாறும் சமய வழிபாடுகளைப் பேணி தமது பண்பாட்டினை மேம்படுத்தும் நோக்கிலும் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலை மாணவர் மட்டுமன்றி இப்பாடநெறியைக் கற்க விரும்பும் அனைவரும் இந்து நாகரிகம் தொடர்பான அடிப்படைக் கருத்துக்களை அறிந்து கொள்ள இப்பாடத்திட்டம் பெரிதும் உதவியாக அமையும்.

இதற்கு முன்னர் கற்பிக்கப்பட்ட இந்து நாகரிகப் பாடத்திட்டத்திலிருந்த, தற்போது நடைமுறையில் இல்லாத விடயங்கள் நீக்கப்பட்டு, நடைமுறைக்குப் பொருத்தமான விடயங்கள் சில உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.0 பாடத்திட்டத்தின் நோக்கம்

01. இந்து நாகரித்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு மதிப்பளித்தல்.

02. இந்து சமய வளர்ச்சியில் பக்தி இயக்கங்களதும் நவீன சமூக சீர்திருத்த இயக்கங்களதும் பங்களிப்புகளை அறிந்து மதிப்பளித்தல்.

03. இலங்கையில் இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் சிறப்பம்சங்களையும் இனங்காணல்.

04. தென்கிழக்காசிய நாடுகளிலும் இந்துக்கள் புலம்பெயர்ந்த நாடுகளிலும் இந்து நாகரிகத்தின் பரம்பலை வரலாற்று ஆதாரங்கள் ஊடாக விளங்கிக் கொள்ளல்.

05. இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் நுண்கலைகள் வகிக்கும் இடத்தினை அறிந்து, அவற்றை நயக்கும் திறனை விருத்தி செய்தல்.

06. இந்து சமய தத்துவ சிந்தனைகளின் அடிப்படைக் கருத்துக்களையும் அவற்றின் உண்மைத் தன்மைகளையும் அறிந்து ஒழுகுதல்.

07. இந்து சமய சிந்தளையாளர்களதும் அறிஞர்களதும் பணிகளை இனங்கண்டு மதிப்பளித்தல்.

08. மனித வாழ்வு செம்மையாகவும் ஆன்மீக ஈடுபாடு உடையதாகவும் அமைவதற்கு, அறவழியில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை அறிந்து, வாழ்வில் கடைப்பிடித்தல்.

09. இந்து அறிவியலானது மனிதவாழ்வை மேம்படுத்துமாற்றினை அறிந்து, கடைப்பிடித்தல்.

10. இந்து சமுதாய வளர்ச்சியில் அரசியல், பொருளாதார, கல்வி, பண்பாட்டுப் பாரம்பரியம் என்பன பெறுமிடத்தை ஆதாரங்களுடன் அறிந்து மதிப்பளித்தல்.

## பாடத்திட்டத்தை பாடசாலைத் தவணைக்கேற்ப வகுத்துக் கொள்வதற்கான உத்தேசத் திட்டம்

| தரம் | தவணை | தேர்ச்சி மட்டம் | பாடவேளை |
| --- | --- | --- | --- |
| **தரம் 12** | 01 | 1.1, 1.2, 1.3, 1.4 | 100 |
| | 02 | 1.5, 2.1, 2.2, 2.3, 3.1 | 100 |
| | 03 | 3.2, 3.3, 3.4 4.1, 4.2, 5.1 | 100 |
| **தரம் 13** | 01 | 6.1, 6.2, 6.3 | 100 |
| | 02 | 6.4, 7.1, 7.2, 8.1, 8.2, 8.3 | 100 |
| | 03 | 8.4, 8.5, 9.1, 10.1, 10.2, 10.3 | 100 |

# 3.0 பாடத்திட்டம்

## 3.1 தரம் - 12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **1.0 இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு, அவை பற்றிய பகுப்பாய்வினை மேற்கொள்வர்.** | 1.1 நாகரிகம், பண்பாடு என்பவற்றின் பொருள் விளக்கங்களையும் அவற்றுக்கு இடையிலான தொடர்புகளையும் அறிந்து, அவற்றில் ஈடுபாடு கொள்வர். | • நாகரிகம், பண்பாடு என்பவற்றின் பொருள் விளக்கம் | 04 |
| | 1.2 இந்து நாகரிகத்தின் சிறப்பம்சங்களை நூலாதாரங்களுடன் விளங்கி, வெளிப்படுத்துவர். | • இந்து நாகரிகத்தின் சிறப்பம்சங்கள் | 06 |
| | 1.3 இந்து நாகரிகத்தின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றை வரலாற்று ஆதாரங்களின் துணைக்கொண்டு காலகட்டங்களாக வகுத்து நோக்குவர். | • இந்து நாகரிகத்தின் மூலாதாரங்கள்<br>• சிந்துவெளி நாகரிகம்<br>• வட இந்தியாவில் இந்துநாகரிகத்தின் வளர்ச்சி<br>• வேதம்<br>• ஆகமம்<br>• மௌரியர் காலம்<br>• குஷாணர் காலம்<br>• குப்தர் காலம்<br>• இதிகாசங்கள்<br>• புராணங்கள்<br>• தருமசாத்திரங்கள் | 50 |
| | 1.4 தமிழகத்தில் சைவம், வைணவம் முதலான சமயங்களின் வளர்ச்சியை வரலாற்று ஆதாரங்களின் துணைக் கொண்டு காலகட்டங்களாக வகுத்து நோக்குவர். | • தமிழகத்தில் இந்து நாகரிகத்தின் வளர்ச்சி<br>  • அறிமுகம்<br>• சங்க காலம்<br>• பல்லவ பாண்டியர் காலம்<br>• சோழர் காலம்<br>• விஜய நகர நாயக்கர் காலம்<br>• ஐரோப்பியர் காலம் | 40 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 1.5 இந்து சமய வளர்ச்சியில் அறுவகைச் சமயநெறிகள் வகிக்கும் பங்கினை ஆதாரங்களுடன் முன்வைப்பர். | • அறுவகைச் சமயநெறிகள்<br>• சைவம்<br>• வைணவம்<br>• சாக்தம்<br>• காணாபத்தியம்<br>• கௌமாரம்<br>• சௌரம் | 16 |
| **2.0 இந்து சமய வளர்ச்சியில் பக்தி இயக்கங்களதும் சமூக சீர்திருத்த இயக்கங்களதும் பங்களிப்புகளை அறிந்து மதிப்பளிப்பர்.** | 2.1 தென்னிந்திய பக்தி இயக்கங்களின் பங்களிப்புக்களை விளங்கிக் கொள்வர். | • தமிழகத்தில் சைவ பக்தி இயக்கம்<br>• தமிழகத்தில் வைணவ பக்தி இயக்கம் | 14 |
| | 2.2 வடஇந்திய பக்தி இயக்கங்களின் பங்களிப்புக்களை விளங்கிக் கொள்வர். | • வட இந்தியாவில் வைணவ பக்தி இயக்கம்<br>• ஸ்ரீ சைதன்யர்<br>• இராமானந்தர்<br>• மீராபாய்<br>• கபீர்தாசர்<br>• வட இந்தியாவில் தமிழகப் பக்தி இயக்கத்தின் செல்வாக்கு | 14 |
| | 2.3 இந்து சமூக சீர்திருத்த இயக்கங்கள் மேற்கொண்ட பணிகளையும் பங்களிப்புக்களையும் அறிந்து, மதிப்பளிப்பர். | • இந்து சமூக சீர்திருத்த இயக்கங்கள்<br>• பிரம சமாஜம்<br>• ஆரிய சமாஜம்<br>• இராமகிருஷ்ண மிஷன் | 16 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **3.0 இலங்கையில் இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு, அவை பற்றிய பகுப்பாய்வினை மேற்கொள்வர்.** | 3.1 இலங்கையில் இந்து மத வரலாற்றினைக் கால அடிப் படையில் விளக்குவர். | • இலங்கையில் இந்து மத வரலாறு அறிமுகம்<br>• இலங்கையில் இந்து மத வரலாறு (கி.மு. 3 - கி.பி. 8)<br>• இலங்கையில் இந்து மத வரலாறு (கி.பி. 9 - கி.பி. 15)<br>• ஐரோப்பியர் காலம் (கி.பி. 16 - கி.பி. 18)<br>• பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சி<br>• இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சி | 40 |
| | 3.2 இலங்கையில் இந்து சமய, சமூக நிறுவனங்கள் ஆற்றி வரும் பணிகளையும் பங்களிப்புகளையும் அறிந்து, அவற்றைப் பாதுகாக்க முன்வருவர். | • இலங்கையில் உள்ள இந்து சமய, சமூக நிறுவனங்கள் - அறிமுகம்<br>  • சைவ பரிபாலன சபை<br>  • சைவ வித்தியா விருத்திச் சங்கம்<br>  • கொழும்பு விவேகானந்த சபை<br>  • இராமகிருஷ்ண மிஷன்<br>  • அகில இலங்கை இந்து மாமன்றம் | 20 |
| | 3.3 இலங்கையில் இந்துக் கோயில்களின் வரலாறு, பண்பாடு தொடர்பான விடயங்கள் பற்றி ஆதாரங்களுடன் அறிந்து, அவற்றைப் பாதுகாக்க முன்வருவர். | • இந்துக் கோயில்களின் வரலாறும் பண்பாடும்<br>  • அறிமுகம்<br>• சிவாலயங்கள்<br>  • திருக்கோணேச்சரம்<br>  • திருக்கேதீச்சரம்<br>  • முன்னேச்சரம்<br>  • பொலனறுவைக் கோயில்கள் | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | <br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br>3.4 ஈழத்துச் சைவப் பெரியார்களின் பணிகளுக்கு மதிப்பளித்து, அவற்றை முன்மாதிரியாகக் கொள்வர். | • கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்<br>● அம்மன் ஆலயம்<br>• நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்<br>● விநாயகர் ஆலயங்கள்<br>• மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்<br>• கண்டி கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம்<br>● முருகன் ஆலயம்<br>• கதிர்காமம்<br>• நல்லூர் கந்தசுவாமி ஆலயம்<br>• மண்டூர் முருகன் ஆலயம்<br>● விஷ்ணு ஆலயம்<br>• வல்லிபுர ஆழ்வார் ஆலயம்<br><br>● ஈழத்துச் சைவப் பெரியார்கள் - அறிமுகம்<br>• ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்<br>• சுவாமி விபுலானந்தர் | <br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br>10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **4.0 தென்கிழக்காசிய நாடுகளிலும் இந்துக்கள் புலம் பெயர்ந்த நாடு களிலும் இந்து நாகரிகத்தின் பரம்பலை, ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குவர்.** | 4.1 தென்கிழக்காசிய நாடுகளில் இந்து நாகரிகத்தின் பரம்பலை, ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குவர். | • தென்கிழக்காசிய நாடுகளில் இந்து நாகரிகம்<br>• அரசு<br>• நிர்வாகம்<br>• சமூகம்<br>• இலக்கியம்<br>• சமயம்<br>• கலை வரலாறு<br>- கட்டடம்<br>- சிற்பம்<br>- ஓவியம்<br>- நடனம்<br>• தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப் பண்பாடு செல்வாக்கு இழந்தமைக்கான காரணங்கள் | 20 |
| | 4.2 புலம் பெயர்ந்த நாடுகளில் இந்து நாகரிகத்தின் பரம்பலை, ஆதாரங்களை அடிப்படை யாகக் கொண்டு விளக்குவர். | • புலம் பெயர்ந்த நாடுகளில் இந்து நாகரிகம்<br>• குடியேற்றம்<br>• ஆலயங்கள்<br>• விழாக்கள்<br>• சடங்குகள்<br>• கலை | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **5.0 இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் நுண்கலைகள் வகிக்கும் சிறப்பினை அறிந்து, நயக்கும் திறனை விருத்தி செய்வர்.** | 5.1 இந்து நுண்கலைகளின் சிறப்பம்சங்களை அறிந்து, நயந்து போற்றுவர். | • இலக்கியம்<br>• இந்து நுண்கலைகள்<br>• நுண்கலைகள் அறிமுகம்<br>• இந்துக் கலைக் கோட்பாடுகள்<br>• கோயிற் கட்டடக் கலை<br>• சிற்பக் கலை<br>• விக்கிரகக் கலை<br>- நடராஜர் மூர்த்தம்<br>- தட்சணா மூர்த்தி மூர்த்தம்<br>- திரிபுராந்தகர்<br>- இலிங்கோற்பவர்<br>• ஓவியக் கலை<br>• நடனக் கலை<br>• இசைக் கலை | 24 |

## 3.2 தரம் - 13

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **6.0 இந்து சமய தத்துவ சிந்தனை களையும் அவற்றை அடிப் படையாகக் கொண்ட கோட் பாடுகளையும் பற்றிய விளக்கத் தைப் பெறுவர்.** | 6.1 இந்து தத்துவ சிந்தனைகளை அறிந்து, அவற்றை ஆதாரங் களுடன் விளக்குவர். | • இந்து தத்துவ சிந்தனைகளின் மூலங்கள்<br>• வேதம்<br>• ஆகமம்<br>• உபநிடதம்<br>• பிரமசூத்திரம்<br>• பகவத்கீதை | 40 |
| | 6.2 வேதாந்த தத்துவ சிந்தனை களைப் பகுப்பாய்வு செய்து, ஆத்மீக வாழ்வியலில் பயன்படுத்துவர். | • வேதாந்தம் ஓர் அறிமுகம்<br>• அத்வைதம் - விளக்கம்<br>• சங்கரரும் அத்வைத வேதாந்தமும்<br>• இராமானுசரும் விசிட்டாத்வைதமும்<br>• மத்துவரும் துவைதமும் | 30 |
| | 6.3 இந்து தத்துவ வளர்ச்சியில் சைவசித்தாந்தக் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை ஆதாரங் களுடன் முன்வைப்பர். | • சைவ சித்தாந்தத்தின் மூலங்கள்<br>• சைவசித்தாந்த சாத்திரங்கள்<br>• சைவசித்தாந்தக் கோட்பாடுகள்<br>  • பதி<br>  • பசு<br>  • பாசம் | 30 |
| | 6.4 இந்து தத்துவத்தில் சைவ சித்தாந்தத்தின் சிறப்பையும் மேன்மையையும் அறிந்து ஆதாரங்களுடன் விளக்குவர். | • இந்து மெய்யியலில் சைவசித்தாந்தத்தின் சிறப்பு<br>• ஆன்மீக மேம்பாடும் சைவசித்தாந்தமும் | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **7.0 இந்து சமய சிந்தனையாளர் களதும் சமய அறிஞர்களதும் பணிகளை மதிப்பீடு செய்வர்.** | 7.1 இந்து சமய பக்திச் சிந்தனை யாளர்களின் கருத்துக்களை அறிந்து, அவர்களது கொள்கை களுக்கு மதிப்பளிப்பர். | • அருணகிரிநாதரும் முருக வழிபாடும்<br>• தாயுமான சுவாமிகளும் சமரச சன்மார்க்கமும்<br>• சிவப்பிரகாச சுவாமிகளும் வீரசைவமும் | 20 |
| | 7.2 ஈழத்துச் சைவசித்தாந்த அறிஞர்களையும் அவர்களது முயற்சிகளையும் அறிந்து மதிப்பளிப்பர். | • ஞானப்பிரகாச முனிவர்<br>• அருணாசல தேசிகர்<br>• காசிவாசி செந்திநாதையர் | 12 |
| **8.0 மனித வாழ்வு செம்மையாகவும் ஆன்மீக ஈடுபாடு உடையதாகவும் அமைவதற்கு அறவழியில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்வர்.** | 8.1 இந்து அறவியல் கோட்பாடு களையும் சாதனைகளையும் அறிந்து, ஒழுகுவர். | • இந்து அறவியல் ஓர் அறிமுகம் | 10 |
| | 8.2 இந்து அறவியல் நூல்களை அறிந்து, அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பர். | • தர்மசாத்திரங்கள்<br>• தமிழ் நீதிநூல்கள்<br>  • திருக்குறள்<br>  • ஆத்திசூடி<br>  • கொன்றைவேந்தன் | 20 |
| | 8.3 இந்து அறவியல் கோட்பாடு களையும் சமண, பௌத்த அறவியல் கோட்பாடுகளையும் ஒப்பிட்டு மதிப்பளிப்பர். | • ஆச்சிரம தர்மங்கள்<br>• புருடார்த்தங்கள்<br>• இந்து அறவியலும் சமண பௌத்தமும் | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 8.4 நாட்டார் வழக்காற்றில் காணப் படும் அறவியல் பண்புகளை இனங்கண்டு, வாழ்வில் கடைப் பிடிப்பர். | • நாட்டார் வழக்காற்றில் அறவியல்<br>• மரபும் பாரம்பரியமும்<br>• வழக்காறுகள்<br>• சென்நெறி முறைகள் | 10 |
| | 8.5 தற்காலச் சமூகத்தில் இந்து அறக் கோட்பாட்டின் முக்கியத் துவத்தினை அறிந்து ஒழுகுவர். | • தற்காலச் சமூகத்தில் இந்து அறக்கோட்பாடு<br>• இந்து அரசியல்<br>• இந்து சட்டம்<br>• இந்து விழுமியங்கள் | 10 |
| **9.0 இந்து சமுதாய விருத்தியில் அரசியல், பொரு ளாதார, கல்விப் பாரம்பரியம் என்பன பெறும் இடத்தை ஆதாரங்களின் ஊடாக முன்வைப்பர்.** | 9.1 இந்து சமுதாய விருத்தியில் இந்து அரசியல் பெறும் இடத்தை ஆதாரங்களின் ஊடாக விளங்கிக் கொள்வர். | • இந்து அரசியல் கோட்பாடுகள் - விளக்கம் | 10 |
| | 9.2 இந்துப் பொருளியல் கோட் பாட்டின் சிறப்பினை விளக்கி மதிப்பளிப்பர். | • இந்துக்களின் பொருளியல் கோட்பாடுகள் - விளக்கம் | 10 |
| | 9.3 இந்துக் கல்விப் பாரம்பரியத்தின் சிறப்புக்களை மதிப்பர். | • இந்துக்களின் கல்விப் பாரம்பரியம் - விளக்கம் | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **10.0 இந்து அறிவியல் கால உணர்வுகளோடும் தேவைகளோடும் இணங்கியும் இசைந்தும் மனிதவாழ்வை மேம்படுத்து மாற்றினை ஆதாரங்களின் ஊடாக விளக்குவர்.** | 10.1 இந்து அறிவியல் தொடர்பான விளக்கங்களை ஆராய் தறிவதன் மூலம் முன்னோரின் அறிவியல் சிந்தனைகளுக்கு மதிப்பளிப்பர். | • இந்து அறிவியல் ஓர் அறிமுகம்<br>• இந்து கணிதவியல்<br>• இந்து வானியல்<br>• சோதிடவியல்<br>• இந்துக்களின் மருத்துவம்<br>• நாட்டார் அறிவியல் | 50 |

## 4.0 கற்றல் - கற்பித்தல் முறை

கற்றல் என்பது வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதாகும். கல்விச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களது அடைவுமட்டமானது, பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தலிலேயே தங்கியுள்ளது.

இங்கு மாணவர்களது வாழ்வியலுக்குத் தேவையான ஆக்கத் திறன், கற்பனைத் திறன், தொடர்பாடல் திறன், சமூகத் திறன் முதலானவற்றையும் ஒழுக்கம், விழுமியம், ஆன்மீகம் சார்ந்த பண்புகளையும் விருத்தி செய்யக்கூடிய கற்றல் முறையை மேற்கொள்ளல் பொருத்தமானது. குறிப்பாக மாணவரது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றினூடாக மாணவர் நடத்தையில் ஏற்படுகின்ற தெளிவானதும் நிலையானதுமான மாற்றமொன்றை இலக்காகக் கொண்டதாகக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும். இம்முறை மனப்பாங்கு விருத்தி, நடத்தை மாற்றம் என்பவற்றை மாணவரிடம் விருத்தி செய்யக்கூடியதாக கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் அமைதல் பொருத்தமானது.

இப்பாடத்திட்டத்தில் சமயம்சார் செயன்முறை அனுபவங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதால், மாணவரின் செயற்பாடு, பங்குபற்றல் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும். பாடத்திட்டத்தினூடாக மாணவர் அடைய வேண்டுமென எதிர்பார்க்கின்ற குறைந்தபட்ச அடைவுமட்டத்தையேனும் அடையச் செய்வதற்கு உதவி செய்ய வேண்டியது ஆசிரியரின் கடமையாகும். அத்துடன் மாணவரைச் சரியாக இனங்கண்டு, கற்றலுக்குத் தேவையான முறையான உபகரணங்களினூடாக அவர்களது அடைவுமட்டத்தை எய்துவதற்கு வழிகாட்டுவதும் அவர்களது கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை விரிவாக்கும்போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- புதிர்ப்போட்டி
- வினாவிடைப்புத்தகம்
- விவாதம்
- குழுக் கலந்துரையாடல்
- கருத்தரங்கு
- நடிபங்கு
- இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல்
- வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப் புத்தகம்

# 5.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

இந்து சமயம் தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், ஆற்றல் மிக்கோரை உருவாக்குவதற்கும், சமயக் கல்வியையும் அதன் பாரம்பரியத்தையும் வளர்த்தெடுப்பதற்கும் பொருத்தமான பின்னணியைப் பாடசாலைகளில் உருவாக்கத்தக்க வகையில், பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கையும் இயைவுபடுத்தப்படல் அவசியமாகும்.

இப் பாடத்தினூடாக, புதிய ஆக்கபூர்வமான சிந்தனையின்பால் வழிப்படுத்தப்படும். மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பாடசாலை வேலைத்திட்டத்தை அமைத்துக் கொள்ளல் பொருத்தமுடையதாகும். இப்புதிய பாடத்திட்டத்தை பாடசாலையில் அமுலாக்கும்போது எமது சமய பாரம்பரியங்களைப் பின்பற்றும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கமைக்கலாம்.

- குருபூசை, பாடசாலைச் சமய விழா முதலான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்து கொடுத்தல்.
- சமய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க ஒழுங்கு செய்து கொடுத்தல்.
- மாணவரின் ஒத்துழைப்புடன் கூட்டாகச் செயற்படக்கூடிய சைவசமய மன்றங்களை அமைத்து நடத்தல்.
- சமயம் தொடர்பான கல்விக் கண்காட்சிகளை வகுப்பறைகளிலும் பாடசாலைகயிலும் நடத்த ஒழுங்கு செய்தல்.
- பாடவிடயம் தொடர்பான முக்கிய இடங்களுக்கு வெளிக்கள, சமயச் சுற்றுலாக்களைத் திட்டமிட்டு, சரியாக நிறைவேற்றுதல்.
- ஒப்படைகள், செயற்றிட்டங்கள், புத்தாக்கம் போன்றவற்றில் ஈடுபட மாணவரை ஊக்குவித்தல்.
- வெவ்வேறு தலைப்புகளில் திட்டமிடப்பட்ட விவாதங்கள், உரையாடல்கள் போன்றவற்றை நடத்துதல்.
- சமயக் கருத்தரங்குகள், சமய விழாக்கள் என்பவற்றில் பங்குகொள்ள ஊக்குவித்தல்.

மேற்கூறியவற்றினூடாக மாணவரின் பல்வேறு திறன்களும், மனப்பாங்குகளும் விருத்தியடையக்கூடிய வகையில் செயற்பாடுகளை வழங்கலாம்.

மேற்படி பணிகளை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆர்வமிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும். இப்பாடத்தைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளையும் ஒத்துழைப்பையும் வழங்க அதிபர் தயங்கலாகாது. மேற்படி செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக மரபுரீதியான பாடசாலைக் கொள்கைகள், வேலைத்திட்டங்களிலிருந்து சற்று விலகி, பாடசாலைக்கெனச் சிறப்பான கொள்கையையும் வேலைத்திட்டத்தையும் வகுத்துக் கொள்ளல் வேண்டும். அதனை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக, பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் உதவியையும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காக, தகைமை வாய்ந்த பட்டதாரி ஆசிரியரை ஈடுபடுத்தலும் பயனுறுதிமிக்க நேரமுகாமையும் மிக அவசியம். அத்துடன் தரவிருத்தி உள்ளீடுகளைச் சமய பாடத்திற்கும் பயன்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு சமய வகுப்பு ஆசிரியரும் தமது வகுப்பில் பயிலும் மாணவர்களைக் கீழ்வரும் ஏழு நற்பழக்கங்களை உடையவர்களாக ஆக்குதல் வேண்டும்.

- கடவுள் பக்தி
- மூத்தோரிடம் மரியாதை
- தியானமும், தொண்டும்
- எமது சமய நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல்
- தாய், தந்தை, குரு ஆகியோரைத் தினமும் வழங்குதல்
- ஒழுக்கம்
- சமய அறிவில் ஆர்வம்

மாணவர்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் ஆக்குவதை ஆசிரியர்கள் இலட்சியமாகக் கொண்டு செயற்பட வேண்டும்.

பாடசாலைகளில் இக்கலைத்திட்டத்தை மேற்குறிப்பிட்டவாறு நடைமுறைப்படுத்துவதனால், அடுத்த தசாப்தத்தில் எமது நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான தேர்ச்சிகளைக் கொண்ட புத்தாக்கம் புரிவோரையும் மனிதப் பண்புள்ளவர்களையும் குறைவின்றி உருவாக்கலாம் என்பதில் ஐயமில்லை.

# 6.0 கணிப்பீடும்   மதிப்பீடும்

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தவணைக்குமென நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் என்பன உள்ளடங்கும் விதத்தில் கணிப்பீட்டுக்கருவிகளைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பாடத்திட்டமானது தரம்- 13 இன் இறுதியில் இடம் பெறுகின்ற தேசிய மட்டக் கணிப்பீடான க.பொ.த. உயர்தர பரீட்சைக்குரியதாகவே தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் தேசிய மட்ட்த்தில் நடத்தப்படுகின்ற முதலாவது பரீட்சை 2011 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குரிய வினாப்பத்திரத்தின் அமைப்பு, மாதிரி பற்றிய தெளிவான விபரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும்.